**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.</u>**

**<u>OS.No.18</u>**<u>/2016</u>

2022-ம் ஆண்டு ஜீலை மாதம் 13-ம் நாள் புதன்கிழமை **வா.சா.1**-ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) கிரேடு 2 பெஞ்ச் க்ளார்க் திருமதி.ஏழிசை என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | அந்தோணியம்மாள் | **வட்டம்** | பரமக்குடி |
| **க.பெ/** | ஜான்பீட்டர் | **சமயம்** | கிறிஸ்துவர் |
| **கிராமம்** | அரியனேந்தல் | **வயது** | 62 |

<u>பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை:</u>

வழக்கிற்கான விவரங்களை நான் தான் சொன்னேன். எனது தகப்பனார் 1995ல் காலமானார். எனது குடும்பத்தில் 4 ஆண்கள், 3 பெண்கள் உள்ளனர். வழக்கில் 5லக்கச்சொத்துக்கள் சிறுபாலை கிராமத்திலும் 12லக்கச்சொத்துக்கள் கோட்டையிருப்பு கிராமத்திலும் உள்ளது. இதில் எது நஞ்சை எது புஞ்சை என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. சிறுபாலையில் நஞ்சை நிலம் இல்லை. கோட்டையூர் கிராமத்தில் நஞ்சை நிலம் உள்ளது. 2 நிலங்கள் விட்டுபோய் விட்டது என்று என்அண்ணன் சொன்னார். அது ரொம்ப தொலைவில் உள்ளது. என் அப்பாவிற்கு பாத்தியமான சொத்துக்கள் சிறுபாலையிலும் கோட்டையூரிலும் உள்ளது. மேற்கண்ட சொத்துக்கள் எந்தளந்த சர்வே நம்பரில் உள்ளது என்று எனக்குத்தெரியாது நான் படிக்கவில்லை. மேற்படி சொத்துக்களின் விஸ்தீரணமும் எனக்குத்தெரியாது. என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட வீடு கோட்டையூரில் உள்ளது. மற்ற இடம் முழுதும் மனையிடம் வேறு ஊரில் உள்ளது. எனக்கு திருமணமாகி 45 வருடம் இருக்கும். 45 வருடங்களாக ராமநாதபுரம் மாவட்டம் அரியனேந்தல் கிராமத்தில் நானும் என் கணவரும் வசித்து வருகிறோம். என் அப்பா இறந்தபிறகு என் அண்ணன் மூத்தவர்

ஜோசப்சேவியர் சொத்துக்களை பார்த்துவந்தார் நானும் உடன் பார்த்துவந்தேன். இந்த சொத்துக்கள் சம்மந்தமாக 2001ல் எங்கள் குடும்பத்தில் ஒரு பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. அந்தக்கால கட்டத்தில் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தி நாங்கள் அனைவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி வட்டத்தில் அரியனேந்தல் கிராமத்தில் நாங்கள் தான் வீடு கட்டினோம் என் சகோதரர் கட்டிக்கொடுக்கவில்லை. என் சகோதரர்கள் என் கணவருக்கு இடங்கள் ஏதும் வாங்கி கொடுக்கவில்லை. எனக்கு ராசாத்தி, பெல்சி என்ற இரு பெண் மக்கள் உள்ளனர். எனது சகோதரர்கள் அவர்களது ஆண் பிள்ளைகளுக்கு பெண் கேட்கவுமில்லை நான் கொடுக்கவுமில்லை. என் தாயார் செல்வமேரி 2005ல் காலமானார். என் தாயாரிடம் தங்க நகைகள் ஏதுமில்லை. என் தாயார் இறக்கும்போது சுமார் 20 முதல் 30 பவுன் தங்க நகைகள் வைத்திருந்தார் என்றும் அவற்றை நாங்கள் பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதி என் சகோதரி. அவரிடம் நான் எந்த தொகையும் நான் கடனாக பெறவில்லை. என் அப்பா உயிரோடிருக்கும்போது எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 3ம் நபருக்கு பதிவு கிரையம் செய்து கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் அம்மா இறந்த பிறகு 2 வருடம் கழித்து என் மூத்த அண்ணன் ஜோசப்சேவியரிடம் சென்று பாகம் கேட்டேன். அதன்பிறகு என் மூத்த அண்ணன் ஜோசப்சேவியர் 2015 ல் இறந்தபிறகு 6 ம் பிரதிவாதி ஜான்பீட்டரிடம் சென்று தாவா சொத்துக்களில் பாகம் கேட்டேன் அவரும் மறுத்துவிட்டதால் தாவா வழக்கு தாக்கல் செய்தேன். தாவா சொத்துக்களுக்கு நான்குமால் தெரியாது ஏனென்றால் நான் படிக்கவில்லை. தாவா சொத்துக்களில் இன்றைய தேதிவரை விவசாயம் நடைபெறுகிறது. இரண்டு சொத்துக்களில் கிணறு பம்புசெட் உள்ளது. 2015க்கு முன்பு

என் மூத்த அண்ணன் ஜோசப்சேவியர் தாவா சொத்துக்களில் விவசாயம் செய்துவந்தார். 2015க்க பின்பு 6ம் பிரதிவாதி ஜான்பீட்டர் தாவா சொத்துக்களில் விவசாயம் செய்துவருகிறார். தாவா சொத்துக்கள் சம்மந்தமாக கடந்த 2001ம் வருடமே பாகப்பிரிவினை ஏற்பட்டு அதனடிப்படையில் பாகப்பிரிவினை எழுதப்பட்டு மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் எங்கள் குடும்பத்தில் அனைவரும் கையெழுத்து செய்துள்ளோம் என்றும் மேற்படி பாகப்பிரிவினை படி தாவாசொத்துக்கள் ஆண் மக்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றும் பெண் மக்களுக்கு ரொக்கமாக தொகைகள் கொடுக்கப்பட்டது என்றும் மேற்படி பாகப்பிரிவினையை மறைத்து தாவா வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட பாகப்பிரிவினை குறிப்பிட்டு எனது சகோதராகள் 3ம் நபர்களுக்கு பதிவுக்கிரையங்கள் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் மேற்படி பத்திரத்தில் நான் கையெழுத்து செய்யவில்லை. 2001 பாகப்பிரிவினைப்படி தாவா சொத்துக்கள் என் சகோதரர்களுக்கிடையே பாகம் பிரிக்கப்பட்டு மேலும் பாகப்பிரிவினையும் நடைமுறைக்கு வந்து என் சகோதரர்களின் பெயர்களில் பட்டா மாற்றம் செய்யப்பட்டு தாவா சொத்துக்களை என் சகோதரர்கள் இன்றைய தேதி வரை தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பற்றிய விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றும் நான் கடந்த 50 வருடங்களாக ராமநாதபுர மாவட்டத்தில் வசித்து வருகிறேன் என்றும் தற்போது கெட்ட எண்ணத்தில் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனாரும் என் சகோதரர்களும் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பல சொத்துக்களை 3ம் நபர்களுக்கு பதிவு கிரையங்கள் செய்து கொடுத்துள்ளார்கள் என்றும் மேற்கண்ட சொத்துக்களையும் மேற்படி 3ம் தரப்பினர்களையும் தாவா வழக்கில் நான்

சேர்க்காததால் தாவா வழக்கு குறைபாடுடைய பாகப்பிரிவினை வழக்காக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை நான் எக்காலத்திலும் அனுபவிக்கவில்லை கூட்டனுபவம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>11ம் பிரதிவாதி தரப்பு கு.வி:</u>**

இவ்வழக்கில் உடையார் கோணார் எதற்காக சேர்த்துள்ளேன் என்றால் தாவா 4, 5 சொத்துக்களை அவர் கிரையம் பெற்றதினால் சேர்த்துள்ளேன். வா.சா.ஆ.4 ஆவணம் இந்த எண் 11ம் பிரதிவாதி பெயரில் தாவா 4, 5 லக்கச்சொத்துக்கள் உள்ள 10(1) என்றால் சரிதான். 11ம் பிரதிவாதி உடையார்கோணார் தாவா 4,5 லக்கச்சொத்துக்களை தாவா வழக்கிற்கு முன்பே கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா 4, 5 வழக்குச் சொத்தினை 11ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள கிரையம் பத்திரத்தை ஆட்சேபனை செய்து நான் பரிகாரம் ஏதும் கோரவில்லை என்றால் சரிதான். தாவா 4, 5 வழக்குச் சொத்தினை 11ம் பிரதிவாதி உடையார் கோணார் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா 4, 5 வழக்குச் சொத்தினை 11ம் பிரதிவாதி உடையார் கோணார் தான் அனுபவம் செய்துவருகிறார் ஆனால் தங்கள் வழக்குரையில் தாவா 4, 5 வழக்குச் சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா 4, 5 வழக்குச் சொத்தினை அனுபவம் செய்ய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் நாங்கள் ஒரு குடும்பமாக இருப்பதால் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என் பாகப்பிரிவினைக்கு போதுமானதாக இல்லை என்று சொன்னால் சரியல்ல.